# மருத்துவச் செலவுகளை குறைநிரப்பும் உதவிகள் ஊடாக மீளப்பெறுதல்

## 1. பெறுவதற்கான முன்நிபந்தனைகள்

மருத்துவக் காப்புறுதியால் பாதுகாக்கப்படாத மருத்துவச் செலவுகளை மீளப்பெறுவதற்கு, அதே காலத்தில் மாதாந்த குறைநிரப்பு உதவிகளைப் பெற்றுவரும் நபர்களுக்கு உரிமையுண்டு. ஒரு நபருக்கு குறைநிரப்பு உதவிகள் அவருடைய அதிகப்படியான வருமானம் காரணமாக நிராகரிக்கப் பட்டிருந்தால், நிராகரிக்கப்பட்ட மருத்துவச் செலவை அதிகப்படியான வருமானத்திலிருந்து கழித்தபின் மீளவும் வழங்கப்பட வேண்டும்.

வழமையாக சுவிசில் ஏற்பட்ட செலவுகளே மீள வழங்கப்படும். வெளிநாட்டில் ஏற்படும் செலவுகளைப் பொறுத்தவரை, நீங்கள் வெளிநாட்டில் தங்கியிருக்கும்போது அவசிய சிகிச்சை பெற்றால் விதிவிலக்கு வழங்கப்படும்.

## 2. ஒப்படைத்தல் / காலக்கெடு

செலவுகளை மீள வழங்குவதற்காக, நீங்கள் பத்திரங்கள் முழுவதையும் பேர்ண் நகர முதியோர்- மற்றும் காப்புறுதித் திணைக்களத்திடம் ஒப்படைக்க வேண்டும், சிறப்பாக ஒவ்வொரு கால் வருடத்திலும்.
முகவரி: Alters- und Versicherungsamt, AHV-Zweigstelle, Bundesgasse 33, 3011 Bern
செலவுகளை மீளப்பெறுவதற்காக அதற்கான கணக்குகள் வழங்கப்பட்டு அல்லது மருத்துவக் காப்புறுதியின் கணக்குகளை 15 மாதங்களுக்குள் விண்ணப்பிக்க வேண்டும்.

## 3. மீள வழங்கக்கூடிய நோய்களுக்கான- மற்றும் இயலாமைக்கான செலவுகள்

- **கட்டாய நோய்ப் பராமரிப்புக் காப்புறுதியிலிருந்து ஏற்படும் செலவில் மருத்துவக்காப்புறுதி பங்களிப்பது** (obligatorische Krankenpflegeversicherung KVG)
  மருத்துவக் காப்புறுதிக் கட்டணம் மற்றும் 10% சொந்தமாகச் செலுத்துவது வருடத்திற்கு 1000 பிராங் வரையாக / பிள்ளைகளுக்கு 350 பிராங் வரையாக ஒவ்வொருவருக்கும், முழுவதுமாக மருத்துவக்காப்புறுதித் திணைக்களம் செலவுக் கணக்குகளைப் பட்டியலிடும்.

- **பற் சிகிச்சைகள்**
  பற் சிகிச்சைச் செலவுகளைப் பொறுத்தவரை, பொருளாதார ரீதியில் மற்றும் தேவைக்கேற்ற சிகிச்சைக் கட்டணங்கள் கவனத்தில் எடுக்கப்படும். இது குறித்து சமர்ப்பிக்கப்படும் கணக்குகள் அல்லது செலவு குறித்த முன் அறிவித்தல்களை மாநில இழப்பீட்டுத் திணைக்களம் ஆய்வுசெய்து முடிவுசெய்யும்.
  திட்டமிட்ட பற்சிகிச்சையின் செலவு எதிர்பார்ப்பின்படி 1500 பிராங்குகளுக்கு அதிகமாக இருப்பின், சிகிச்சையின் முன்பாக செலவு குறித்த ஒரு முன்அறிவித்தலை பல்பத்திரத்துடன் (பற்களின் நிலைமையுடன்) சமர்ப்பிக்க வேண்டும். கணக்கு விபரங்கள் மற்றும் செலவு முன்னறிவித்தலில் எப்பொழுதும் பல்லின் இலக்கம் குறிப்பிடப்பட வேண்டும். முதல் தடவையாக ஒரு பல்வைத்தியரின் கணக்கைச் சமர்ப்பிக்கும்போது ஒரு பல் பத்திரம் தேவைப்படும்.
  அத்துடன் திட்டமிட்ட பல்வேர் சிகிச்சைப் பராமரிப்பு, பல்கவர், பல் நடுதல், பல் உள் நிரப்பல், பல் மெல்வதை நிரப்பல் பல் பாலம், வேருக்குள் தாக்கும் குச்சி போன்றவைக்கு முன்கூட்டியே செலவு குறித்த முன்னறிவித்தலை பல் பத்திரத்துடன் பரிசீலனைக்காக சமர்ப்பிக்குமாறு பரிந்துரை செய்யப்படுகின்றது. பல் வைத்தியர்களின் கணக்குகளைச் சமர்ப்பிக்கும் மேலதிக முறைகள் குறித்த விளக்கப் பத்திரத்தை, AHV-கிளைநிலையத்தில் (AHV-Zweigstelle) அல்லது www.akbern.ch, எனும் இணையத்தளத்தில் பார்வையிடலாம்.

- **அண்மையிலிருக்கும் வைத்திய நிலையத்திற்கான போக்குவரத்து**
  அண்மையிலிருக்கும் வைத்திய நிலையத்திற்கான போக்குவரத்துச் செலவை மீளப் பெறுவதற்கு அதற்கான செலவை ஒரு படிவத்தில் நிரப்ப வேண்டியிருக்கும். வாடகை

சிற்றூர்தி/பேர்ண் மாநில இயலாதவர்களுக்கான போக்குவரத்து (Betax) /தனிப்பட்ட சிற்றூர்தியில் போக்குவரத்து செய்தமைக்காக ஒரு வைத்தியரால் நோயாளி பொதுப்போக்குவரத்தைப் பாவிக்க முடியாதிருந்ததை உறுதிப்படுத்தினால் மட்டுமே செலவு மீள வழங்கப்படும். இதற்கான விண்ணப்பப் படிவம் மற்றும் விளக்கப் பத்திரத்தை AHV-கிளைநிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

- **குடும்ப உறுப்பினர்களால் மேற்கொள்ளும் உதவி மற்றும் பராமரிப்பு,** குடும்ப உறுப்பினர் AHV-வயதை அடையாதவராகவும் EL-குறைநிரப்பு உதவிகளில் சேராதவராகவும் இருந்தால். குடும்ப உறுப்பினர்கள் மேற்கொள்ளும் தேவைப்படும் அடிப்படை உதவிகள், அதாவது வாய்- மற்றும் உடல் பராமரிப்பு, படுக்கை விரிப்பு ஒழுங்கு செய்தல், திருப்புதல், அசைவாடச் செய்தல் போன்றவைகளுக்கு அதாவது மணித்தியாலத்திற்கு 25 பிராங்குகளும் ஆகக்கூடியது வருடம் ஒன்றிற்கு 9600 பிராங்குகளும் வழங்கப்படும்.

  குறைநிரப்பு உதவிகளில் இருந்து-மருத்துவச் செலவுகளுக்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட பராமரிப்பு நடவடிக்கைகள் (உதவியற்றவர்களுக்கு வழங்கப்படும் பராமரிப்புக்கான கட்டணத்தைப் பெற உரித்து இருந்தால்) மணித்தியாலப் பராமரிப்புக்காக 25 பிராங்கும் ஆகக்கூடியது வேலைநேரத்தின்போது செய்யப்படும் பராமரிப்பின் அளவைப் பொறுத்தும் உதவி வழங்கப்படும். வேலை நேரத்தில் விடுப்பு எடுத்து பராமரிப்புச் செய்யும் உண்மையான நேரங்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆகவே இதனால் கட்டாய சமூகக் காப்புதிக் கட்டணத்தை (AHV/IV போன்றவைகளை) செலுத்த வேண்டிய கடமை மற்றும் வரியைச் செலுத்த வேண்டிய தேவையும் இருக்கும்.

  தேவைப்படுவதற்கான அறிவித்தலை செய்வதற்கு அவசியமான படிவங்களை AHV-கிளைநிலையத்தில் அல்லது www.akbern.ch இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம். இதனுடன் வீட்டில் உதவி மற்றும் பராமரிப்பு தேவைப்பட்டால் அதன் விபரங்களை ஒரு வைத்திய சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

- **வீட்டுவேலைகளில் ஒரு நிலையமோ அல்லது நபரோ, அதே வீட்டில் வசிக்காமல் உதவுதல்**
  பேர்ண் நடமாடும் மருத்துவச் சேவை ஊடாக வீட்டுவேலைகளில் உதவுவதற்கு கட்டாய தேவை உள்ளதென்ற விளக்கம் மற்றும் ஒரு வைத்திய சான்றிதழ் தேவைப்படும், இதற்கும் வருடம் ஒன்றிற்கு 9600 பிராங்குகள் வரை வழங்கப்படும்

  தேவைப்படும் வீட்டுவேலைகளை குடும்ப உறுப்பினரோ அல்லது மூன்றாம் நபரோ செய்தால், கணக்கு வைக்கப்படும் உறுதிப்படுத்தப்பட்ட செலவுகளாக 4800 பிராங்குகள் (ஆகக்கூடியது 25 பிராங் மணித்தியாலத்திற்கு) வருடாந்தம் வழங்கப்படும். இதற்கும் ஒரு வைத்தியரின் சான்றிதழ் மற்றும் வீட்டு வேலை உதவிகள் குறித்த உறுதிப்படுத்தல் தேவைப்படும். இதன்போது இதை மேற்கொள்ளும் நபர் அதே வீட்டுச் செலவில் வாழக்கூடாது.

- **உதவும் பொருட்கள்**
  உதவும் பொருட்களுக்கான செலவுகள், இவை AHV யால் ஒரு பகுதியாகப் பொறுப்பேற்கப்படும் (உருளும் கதிரை, காலுக்கேற்ற மருத்துவ ரீதியில் அளவான- மற்றும் வடிவமைக்கப்பட்ட சப்பாத்துக்கள், முகத்திற்கான மூடிகள், செயற்கைத் தலைமுடி, காது கேட்கும் கருவிகள், கதைக்க உதவும் கருவிகள், பெரிதாக்கும் கண்ணாடிகள்) மற்றும் வில்லைக் கண்ணாடிகள்.
- **ஒரு இல்லத்தில் அல்லது வைத்தியசாலையிலிருந்து ஓய்வுபெற்றுத் தங்கியிருத்தல்**
- **வைத்தியரால் உத்தரவிடப்பட்ட குளித்தல்- மற்றும் ஓய்வுபெறும் சேவைப் பராமரிப்பு**
- **நாள் பராமரிப்பு நிலையத்தில் சேவை உதவி மற்றும் பராமரிப்பு**
- **பேர்ண் நடமாடும் பராமரிப்பு சேவையில் நோயாளிகள் பங்கெடுப்பது**
- **வீட்டில் வைத்திய ரீதியாகத் தேவைப்படும் உணவுக் கட்டுப்பாடு**
  வீட்டில் வைத்திய ரீதியாகத் தேவைப்படும் உணவுக் கட்டுப்பாட்டுக்காக உறுதிப்படுத்தப்படும் மேலதிக செலவுகள் (நீரிழிவுக்கான உணவுகள் இதில் அடங்காது).

## 4. மீள வழங்கப்படும் ஆகக்கூடிய தொகைகள்

உறுதிப்படுத்தப்பட்ட நோய்- மற்றும் இயலாமைக்கான செலவுகள் ஒரு கலண்டர் வருடத்திற்கு வழமையான வருடாந்த குறைநிரப்பு உதவிகளுக்கு மேலாக ஆகக்கூடியது பின்வரும் தொகைகள் வழங்கப்பட முடியும்:

- தனியாளுக்கு 25 000 பிராங்குகள்
- தம்பதிகளுக்கு 50 000 பிராங்குகள்
- பராமரிப்பு இல்லத்தில் வசிப்பவருக்கு 6000 பிராங்குகள்